மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1958ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 7-ன்படி பரிசீலனை செய்யப்பட்டு, அரசின் நிதி நிலைமையையும் கருத்தில் கொண்டு உரிய முடிவு எடுக்கப் படவுள்ளது.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான உத்திர மேரூர் தொகுதி தமிழகத்திலேயே அதிகமான ஊராட்சி மன்றங்களை உள்ளடக்கிய ஒன்றியமாகும். ஒரு பேரூராட்சி, 73 ஊராட்சி மன்றங்களை உள்ளடக்கிய அந்த ஒன்றியத்தில் குறிப்பாக 234 கிராமங்கள் உள்ளடக்கி இருக்கின்றன. எனவே உத்திரமேரூர் ஒன்றியம் என்றும் சாலவாக்கம் ஒன்றியம் என்றும் பிரித்துத் தரவேண்டுமென்று, அதிலும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலேயே அது நடைபெற வேண்டுமென்று மக்கள் விரும்புகிறார்கள். அதை நிறைவேற்றித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒன்றியத்தை இரண்டாகப் பிரிப்பதற்கு ஏற்படுகின்ற நிதி ஆதாரத்தை மையமாகக் கொண்டு, தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, விரைவில் இதுபற்றி முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 96. திரு. என். பன்னீர்செல்வம், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

96—

கூட்டுறவு நிலவள வங்கி பணியாளர்கள்.

* 4343—திரு. என். பன்னீர்செல்வம்:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கூட்டுறவு நிலவள வங்கிகளில் பணியாற்றும் சூப்ரவைசர்கள், மேனேஜர்கள், கிளார்க்குகள் ஆகியோரை அரசு விதிகளின்படி பணிமாற்றம் செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா ?

VAIMAYE VELLUM TRUTH ALONE TRIUMPHS

1992 பிப்ரவரி 7]

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு அலுவலர்களுக்கான மாற்றல்விதிகள் நிலவள வங்கிகளின் பணியாளர்களுக்குப் பொருந்தாது. எனவே, அவர்களை அரசு ஊழியர்கள் மாதிரி பணி மாற்றம் செய்யும் வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பரையாக ஆண்டு வந்த பட்டாண்மையார், கணக்குப்பிள்ளைகளை நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் மாற்றினார்கள். அது அனைவரும் அறிந்ததே. அந்த அடிப்படையிலே இதுபோன்ற பணியாளர்களையும் மாற்றம் செய்தால்தான், அரசால் வழங்கப்படுகின்ற, ஏழை எளிய விவசாய மக்களுக்கு கொடுக்கப்படுகின்ற சலுகைகள் முறையாகக் கிடைக்கும் என்று நான் நினைக்கிறேன். அந்த அடிப்படையில் அரசு அவர்களை மாற்றம் செய்ய ஆவன செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரதம நிலவள வங்கிகள் தனித் தன்மை கொண்டவையாகும், அவைகளுக்கென்று தனியாக துணை விதிகள், பை-லாஸ் இருக்கின்றன. அவைகளுடைய செயல் திறனும் செயல்பாடும், பணியாளர்களுடைய நிலைமையும் துணை விதிகளுக்கு ஏற்ப ஒழுங்குபடுத்தப்படுகின்றன. ஒரு நிலவள வங்கியிலேயிருந்து இன்னொரு நிலவள வங்கிக்கு மாற்றக்கூட முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர்களுக்கு அரசு விதிகள் பொருந்தும் என்பது முடியாதது ஆகும்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் அவையின் முன் அனுமதியோடு நீட்டிக்கப்பெறுகிறது. திரு. காந்திராஜன், கேள்வி மட்டும் கேட்க வேண்டும்.

திரு. ச. காந்திராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலவள வங்கிகள் மட்டுமல்ல, ஏ.சி.எஸ். என்று சொல்லப்படுகின்ற அந்தக் கிராம வங்கிகளிலே இருக்கின்ற செயலாளர்களும் இப்படிப்பட்ட சூழ்நிலையிலிருந்து மாற்றியமைக்கவும், இல்லையென்றால் எதிர்காலத்திலே இன்னும் மோசமான சூழ்நிலை ஏற்படும் என்பதைக் கருத்திலே கொண்டு இந்த அரசு இதற்கான பைலாவைத் திருத்துகின்ற அந்தச் சட்ட விதிகளை எதிர்காலத்திலே கொண்டு வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் ; பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட புகார்கள் அரசுக்கு வந்து கொண்டிருக்கின்றன. அங்கே இருக்கிற நிரந்தர ஊழியர்கள், குறிப்பாகச் செயலாளர்கள் தவறு செய்கின்றார்கள். அவர்களை மாற்ற முடியவில்லை என்று தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களும் இங்கே வந்து சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். எனவே, இதைப்பற்றி அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 97, செல்வி எல். சுலோசனா, மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

97—

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்.

*4358—செல்வி எல். சுலோசனா :

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ் மணமகள் திருமணத்திற்குப் பின் இறந்துவிட்டால், உதவித் தொகையினை மணமகளின் பெற்றோர்களுக்கு வழங்குவதற்கான அரசின் பரிசீலனையில் உள்ள கருத்துரு பற்றிய முடிவு எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) எம் எனில், விரைவில் முடிவெடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் முடிவு எடுக்கும்.

செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளுடைய திருமணத்திற்கு வாங்கப்பட்ட கடன் தொல்லைகளினால் கடந்த ஒரு வருஷமாக அல்லல்படும் மணமகளின் தந்தைக்கு, திருமண உதவித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் பணம் விரைவில் கிடைக்க அரசாங்கத்தால் ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய அரசு பொறுப்பேற்றதற்குப்